07.07.2025 OS.No. 66 / 2020

**பி.வா.சா.1 பெயர்: பன்னீர்செல்வம் த/பெ. குப்பன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:**

வாதிகள் வழக்கு சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் யாரிடம் இருந்து எந்த வருடம் எவ்வளவு சொத்து வாங்கினார் என்றால் தெரியாது. பெருமாள் கவுண்டர் மகன் ராமகவுண்டர் யார் என்றால் தெரியாது. அருந்ததியர் குடியிருப்புக்கு யாரிடம் இருந்து நிலத்தை எடுத்தார்கள் என்றால் 4 ம் வாதி தகப்பனாரிடம் இருந்து எடுத்தார்கள். எவ்வளவு நிலம் எடுத்தார்கள் என்பது தெரியாது. எத்தனை பேருக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் 42 பேருக்கு கொடுத்தார்கள். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் மேற்படி 4 ம் வாதியின் தகப்பனாரிடம் தான் நிலம் எடுத்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி எடுத்த நிலத்திற்கு சர்வே எண் தெரியாது. அருந்ததியர் காலனி ரோட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. வாதிகளின் நிலம் ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது. மேற்படி அருந்ததியர் காலனிக்கு தெற்கு பக்கம் சண்முக செட்டியார் நிலம். சாட்சி தற்போது வாதிகள் நிலம் என கூறுகிறார். மேற்படி தெற்கே உள்ள நிலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அருந்ததியர் காலனி வாதியின் நிலம் பிரிப்பதற்கு வரப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வரப்பு கட்டி எவ்வளவு நாள் இருக்கும் என்றால் சுமார் 30 வருடத்திற்கு மேல் இருக்கும். மேற்படி அருந்ததியர் காலனிக்கு கொடுத்தது மற்றும் வரப்பு போக மீதம் உள்ள இடத்தை அவர்கள் நெல் உள்ளிட்ட பயிர்கள் செய்து வருகிறார்கள். தற்போது குச்சு கிழங்கு உள்ளது. மேற்படி காலனிக்கு கொடுத்தது போது வேறு யாருக்காவது நிலம் வாதிகள் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. ஜெயராமன் மற்றும் ரவி ஆகியோர் கோவிந்தனுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அருந்ததியர் குடியிருப்புக்காக பட்டா கொடுக்கும் போது ஒவ்வொரு முறையும் அளந்து கொடுத்தார்கள். அதேபோல் வாதிகள் நிலத்தையும் அளந்தார்கள். காலனிக்கு கொடுத்த நிலத்தை தவிர மீதம் உள்ள நிலத்திற்கும் எங்களுக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து தான் சாட்சியம் அளிக்கிறேன். பி.சா.8 சர்வே எண் 4/3D என்பது நிலவியல் பாதை மற்றும் ஜெயராமன் மற்றும் 6 பேருக்கு சொந்தமானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் பி.சா.9 தில் 3D என்பது வண்டி பாதை என்றாலும் 3E1 என்பது அருந்ததியர் காலனி என்றாலும், 3E2 வாதிகள் நிலம் என்றாலும் சரிதான். சர்வே எண் 4/3Dக்கு பட்டா எண் 100 என்றால் சரிதான். மேற்படி 4/3D பாட்டா எண் 100 என ஜெயராமன் மற்றும் 6 பேர் உள்ள சொத்துக்களின் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி 6 பேர் என்பது கோவிந்தன், யசோத,

குள்ளம்மாள், முருகம்மாள், சரவணன், சண்முகம் ஆகியோர்கள் என்றால் சரிதான். நிலவியல் பாதை நீளம், அகலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாதை எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்றால் தெரியாது. ரவிக்கு வெண்ணாம்பட்டியில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் தெரியாது. அதை பொருத்து நான் எதும் முதல் விசாரணையில் சொல்லவில்லை. கோவிந்தன் நிலத்திற்கு ரவி நிலத்தின் மூலமும், ரவி நிலத்திற்கு கோவிந்தன் நிலத்தின் மூலமும் செல்லவேண்டியது இல்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 4/3D நிலவியல் பாதை யாருக்காவது விற்றுள்ளார்களா என்றால் இல்லை. 1,2 வாதிகள் பெருமாள் கவுண்டர் மகன் ராமகவுண்டர் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்துக்கள் காலனிக்கு கொடுத்தது போது மீதம் உள்ள நிலத்தில் எங்களுக்கு எந்த வித பாத்தியம் உரிமையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 4/3E2 வில் உள்ள 0.46.50 வில் எங்களுக்கு எந்த பாத்தியம் இல்லை என்றால் சரிதான். WP மனு எந்த சர்வே எண்ணுக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அது எங்கள் ஊர் கவுண்டர் குமார் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி WP மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை வாதிகள் தென்னை உள்ளிட்ட மரங்கள் வைத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அது வாதிகளின் விவசாய நிலத்துடன் ஒட்டியிருந்தது. அவ்வாறு எவ்வளவு நாட்களாக அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அனுபவம் செய்துவந்தார்கள். அவர்கள் அவ்வாறு மரம் வைத்து அனுபவம் செய்து வந்தபோதும் வெண்ணாம்பட்டி மக்கள் ஆற்றுக்கு சென்றுவந்தார்கள் என்றால் அவ்வாறு யாரும் செல்லவில்லை. வண்டி பாதை எப்போது அளந்தார்கள் என்றால் எனக்கு தெரிந்து அளக்கவில்லை. அவ்வாறு அளக்க வந்தால் ரவி தனக்கு சொந்தநிலம் என சொல்வார் என்றால் சரிதான். சர்வே எண் 4/3D யை அளப்பதற்கு நாங்கள் எதும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 4/3D அளவுகள் மற்றும் அங்க அடையாளங்களை தெரிந்து கொள்ள நீதிமன்றத்தின் ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்தேன் என்றால் இல்லை. மொரபூர் காவல் நிலையத்தில் கொடுத்த மனுவோ அல்லது வருவாய்துறைக்கு கொடுத்த மனுவோ அதற்கான ஒப்புதலோ அதன் விசாரணையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தருமன் என்பவர் வாதிகளுக்கு உறவினர் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.